மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.04/2022
இல்
இ.ம.எண்.02/2022
இல்
அ.வ.எண்.99/2022

கருப்பண்ணன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. பரமசிவம்
2. மாதம்மாள்
3. முத்துசாமி
4. பழனிசாமி
5. ஜெயம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 05.09.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கே.சத்தியப்பிரியா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சிவபிரகாசம் அவர்கள் ஆஜராகியும், 4, 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.செல்வம் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த இவ்வழக்கில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் விதி 28(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் 13.09.2022ம் தேதி நிர்ணயிக்கப்பட்ட வாய்தாவை முன்னதாக நிர்ணயிக்க அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்/வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு

நிலுவையில் உள்ள போது 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார் சாலையிலிருந்து சஎண்.169/1B4 வழியாக ச.எண்.169/1B3 நிலத்திற்கு மேற்கு நோக்கி செல்லும் சுமார் 156 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட மண்பாதையை டிராக்டர் வைத்து ஓட்டி அழித்துவிட்டனர். அதுகுறித்து மேச்சேரி காவல்நிலையத்தில் புகார் செய்து CSR.357/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேச்சேரி காவல்நிலையத்தில் 1ம்பிரதிவாதியை அழைத்து விசாரித்த போது வாதி செல்வதை தடை செய்யவில்லை என்று கூறி சென்றார். ஆனால் மீண்டும் 05.08.2022ம் தேதியன்று தாவா பாதையை JCB வாகனத்தை வைத்து 10 அடிக்கு ஒரு குழியை தோண்டிவிட்டனர். மனுதாரரின் வீட்டைவிட்டு வெளியேற தாவா பாதையை தவிர வேறு வழியில்லை. மேற்படி தோண்டப்பட்ட குழியில் செடிகளோ, மரங்களோ வைத்துவிட்டால் மனுதாரருக்கு வழி வசதி உரிமையை துய்க்க முடியாமல் போய்விடும். மேலும் தாவா மண்பாதையின் பௌதீக தன்மையையும் மாற்ற முயற்சி செய்து வருகிறார்கள். எனவே மேற்படி வழக்குடன் இடைக்கால தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் வருகின்ற 13.09.2022ம் தேதியன்று 1ம்பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்வதற்காக நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ள தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்னதாக நிர்ணயிக்க கோரி மனுதாரர்/வாதி மனு தாக்கல் செய்துளார்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தவறான சங்கதிகளை கொண்டும், உண்மையை மறைத்தும், ஆவணங்களை காட்டாமலும் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்து துர்லாபம் அடைய முயற்சி செய்கிறார். தாவா சொத்துவிவரமே தவறு. கடந்த 11.07.1975ல் மனுதாரர் தந்தை அழகப்பன், அவரது குடும்பத்தார்கள் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து எழுதிய தடபாத்திய உடன்படிக்கையில் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் குடும்பத்தினர்களுக்கு ச.எண்.169/1ல் 10 அடி அகலம் கிழமேல் 175அடி நீளமுள்ள தடமும், ச.எண்.173/1ல் கால் வழித்தடமும், 175அடி நீளம் தடமும் விட்டுள்ளார்கள் என குறிப்பாக எழுதப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் விவசாயம் செய்து அனுபவித்து வரும்

ச.எண்.169/1B4 வழியை பயன்படுத்தி வருவதாக கூறுவது பொய்யாகும். ச.எண்.169/1B3 ல் இருந்து வடக்கே சென்று ச.எண்.169/1B2 வழியாக கால்நடையாகவும், ச.எண்.169/1A2 1A1 வழியாக தான் செல்ல வேண்டும் என மேற்படி தட புலவரைபடத்தில் குறிப்பிட்டுள்ளது. மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் நிலம் வழியாக தடபாத்தியம் இருந்திருந்தால் ஆவணமும் ஒப்படைத்திருப்பார் அல்லது ஆணையர் மனுவை தாக்கல் செய்திருப்பார் என்பது உண்மை. மனுதாரர் ஒப்படைத்துள்ள ஆவணங்களே மனுதாரர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பது தெரியவரும். 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் பட்டாவாக இருந்து உழவுசெய்து அனுபவித்து வரும் நிலத்தில் பரிகாரம் கேட்க மனுதாரருக்கு உரிமையில்லை. பிரமாணப்பத்திரிக்கையில் உள்ளதுபோல 05.08.2022 ல் எந்த நிகழ்வும் நடக்கவில்லை. உண்மை சங்கதிகளை மறைத்து நீதிமன்றத்தின் கவனத்தை திருப்பி துர்லாபம் அடைய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம்எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

<u>3) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் மற்றும் குறிப்பாணையின் பேரில் 4, 5ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் ச.எண்.169/1B4 ல் இருந்த மண் பாதையை டிராக்டர் வைத்து ஓட்டி அழித்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக மனுதாரர் மேச்சேரி காவல்நிலையத்தில் புகார் அளித்த போது 1ம்எதிர்மனுதாரரை விசாரித்தபோது மனுதாரர் செல்வதை தடைசெய்யவில்லை என கூறிவிட்டு, மீண்டும் 05.08.2022 அன்று தாவா பாதையை JCB வைத்து 10 அடிக்கு ஒரு குழியை தோண்டிவிட்டார் என கூறியுள்ள சங்கதிகள் யாவும் பொய். மேற்படி சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் மேற்படி மண் பாதையை தவிர மனுதாரருக்கு அவரது வீட்டை அடைய வேறு வழியில்லை என்றும், மேற்படி தோண்டப்பட்ட குழியில் செடிகளோ, மரங்களோ வைத்துவிட்டால் மனுதாரருக்கு வழி வசதியுரிமை பாதிக்கப்படும் என்றும், அதனால் அசல்வழக்குடன் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுவை அவசரமாக விசாரிக்க வேண்டும் என கூறுவது பொய்.

(ii) உண்மையில் மனுதாரருக்கு அவரது பெரியப்பா மல்லுபையன் நிலத்திற்கு வடபுறம் மண்பாதை விடப்பட்டுள்ளது. மேற்படி மண்பாதை மனுதாரரின் பாட்டி சின்னதாயின் அனைத்து வாரிசுகளுக்கும் பொதுவாக விடப்பட்டுள்ளது. மேற்படி மல்லுபையனின் நிலத்திற்கு வடபுறம் உள்ள பொது மண்பாதையையே மனுதாரர் உபயோகித்து வருகிறார். தற்போது மேற்படி பொது வழிதடத்தை மறைத்து வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரர் நிலத்தில் மண்பாதை உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் கூறுவதுபோல் 1ம் எதிர்மனுதாரர் நிலத்திலோ, இந்த எதிர்மனுதாரர்கள் நிலத்திலோ மனுதாரருக்கு எவ்வித பாதையும் இல்லை. 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் சார்வு செய்திருக்கும பட்சத்தில் அவர்கள் 13.09.2022ம் தேதி மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜராக இயலும். இந்நிலையில் தாவாவில் இ.ம.எண்.2/2022 மனுவை அட்வான்ஸ் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மேற்படி மனு குறித்த சங்கதிகள் சம்பந்தமாக 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காத காரணத்தால் மேற்படி மனு நிலைக்கத்தக்கதல்ல. ஆகவே மனுவினை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>5) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>6) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார் சாலையிலிருந்து சஎண்.169/1B4 வழியாக ச.எண்.169/1B3 நிலத்திற்கு மேற்கு நோக்கி

செல்லும் சுமார் 156 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட மண்பாதையை டிராக்டர் வைத்து ஓட்டி அழித்துவிட்டனர் எனவும், அதுகுறித்து மேச்சேரி காவல்நிலையத்தில் புகார் செய்து CSR.357/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், மேச்சேரி காவல்நிலையத்தில் 1ம்பிரதிவாதியை அழைத்து விசாரித்த போது வாதி செல்வதை தடை செய்யவில்லை என்று கூறி, மீண்டும் 05.08.2022ம் தேதியன்று தாவா பாதையை JCB வாகனத்தை வைத்து 10 அடிக்கு ஒரு குழியை தோண்டிவிட்டனர் எனவும், மனுதாரரின் வீட்டைவிட்டு வெளியேற தாவா பாதையை தவிர வேறு வழியில்லை எனவும், மேற்படி தோண்டப்பட்ட குழியில் செடிகளோ, மரங்களோ வைத்துவிட்டால் மனுதாரருக்கு வழி வசதி உரிமையை துய்க்க முடியாமல் போய்விடும் எனவும், மேலும் தாவா மண்பாதையின் பௌதீக தன்மையையும் மாற்ற முயற்சி செய்து வருகிறார்கள் எனவும், எனவே மேற்படி வழக்குடன் இடைக்கால தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் வருகின்ற 13.09.2022ம் தேதியன்று 1ம்பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்வதற்காக நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ள தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்னதாக நிர்ணயிக்க கோரி மனுதாரர்/வாதி மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் பட்டாவாக இருந்து உழவுசெய்து அனுபவித்து வரும் நிலத்தில் பரிகாரம் கேட்க மனுதாரருக்கு உரிமையில்லை எனவும், பிரமாணப்பத்திரிக்கையில் உள்ளதுபோல 05.08.2022ல் எந்த நிகழ்வும் நடக்கவில்லை எனவும், உண்மை சங்கதிகளை மறைத்து நீதிமன்றத்தின் கவனத்தை திருப்பி துர்லாபம் அடைய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம்எதிர்மனுதாரர்ஆகவே தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் பெரியப்பா மல்லுபையனின் நிலத்திற்கு வடபுறம் உள்ள பொது மண்பாதையையே மனுதாரர்

உபயோகித்து வருகிறார் எனவும், தற்போது மேற்படி பொது வழிதடத்தை மறைத்து வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரர் நிலத்தில் மண்பாதை உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், மேலும் மனுதாரர் கூறுவதுபோல் 1ம் எதிர்மனுதாரர் நிலத்திலோ, இந்த எதிர்மனுதாரர்கள் நிலத்திலோ மனுதாரருக்கு எவ்வித பாதையும் இல்லை எனவும், 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் சார்வு செய்திருக்கும பட்சத்தில் அவர்கள் 13.09.2022ம் தேதி மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜராக இயலும் எனவும், இந்நிலையில் தாவாவில் இ.ம.எண்.2/2022 மனுவை அட்வான்ஸ் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மேற்படி மனு குறித்த சங்கதிகள் சம்பந்தமாக 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காத காரணத்தால் மேற்படி மனு நிலைக்கத்தக்கதல்ல எனவும், ஆகவே மனுவினை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர் இம்மனுவுடன் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவை முன் எடுக்க வேண்டும் என கோரியுள்ளது தெரிய வருகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு 13.09.2022ம் தேதியில் பதிலுரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இன்றைய 07.09.2022ம் தேதியில் இம்மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு நியாயமான தேவை உள்ளதா? என பரிசீலனை செய்கையில் தரப்பினர்களிடையே தாவா வழிபாதை சம்மந்தமாக இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டும் பூசல்கள் தொடர்கிறது என இருதரப்பு வாதங்களிருந்தும் தெரியவருகிறது.

(v) எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு 13.09.2022ம் தேதியில் வாய்தா நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தேதியிலோ அல்லது குறுகிய கால கட்டத்திற்குள் ஏதேனும் முந்தைய தேதிகளில் வழக்கை முன்னெடுப்பு செய்து வாய்தா நிர்ணயிக்கப்படுவதால் எதிர்தரப்பினருக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட போவதில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. வழக்கு முன்னெடுப்பு நாள்.10.09.2022 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. தரப்பினர்கள் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2022.09.07 18:11:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2022.09.07 18:11:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.